# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.827/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கந்தையா | த-பெ | லெட்சுமணன் |
| ஊர்: | : | சாத்தம்பட்டி | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பரோட்டா மாஸ்டர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.04.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் சாத்தம்பட்டியில் வசித்து பரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 06.09.2021 அன்று நானும் எனது நண்பர் பாண்டி என்பவரும் மதியம் 3.15 மணியளவில் கோவிலூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தோம். மேற்படி கோவிலூர் பேருந்து நிறுத்தம் அருகில் பள்ளிக்கு சென்ற மாணவன் இருசக்கர வாகனத்தில் சென்ற போது பேருந்து ஒன்று அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது தொடர்பாக குன்றக்குடி போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2.** வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்

குறுக்கு விசாரணை

1. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது நான் கையொப்பம் மட்டும் செய்தேன். கோவிலூர் பேருந்து நிறுத்தத்தில் இருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் என்றால் 500 மீ இருக்கும். நான் கையொப்பமானது காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.08 11:12:58 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.